# உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலம் தொடர்பான அறிக்கை

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் (சட்டமூலம்) 2023 செப்டெம்பர் 15ஆம் திகதி வெளியிடப்பட்டதையும் மற்றும் 2023 ஒக்டோபர் 3ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதையும் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (C.P.A) கருத்தில் கொள்கிறது. 2023 செப்டெம்பர் 22ஆம் திகதி வெளியிடப்பட்ட தொடர்ச்சியான விளக்கப்படங்களில் இருந்து சட்டமூலத்தின் பல வாசகங்கள் குறித்து அதன் ஆரம்ப கரிசனைகள் தொடர்பாக CPA பகிர்ந்து கொண்டது. அதில் அடிப்படை உரிமைகளைத் தடுக்கும் மற்றும் இலங்கையின் ஜனநாயகத்தை சிதைக்கக்கூடிய விடயங்கள் சார்ந்த பல கரிசனைகளை கோடிட்டுக்காட்டியுள்ளது. சட்டமூலம் தனிநபர்கள் மற்றும் குழுக்களின் பாதுகாப்பு, குறிப்பாக நிகழ்நிலையில் அச்சுறுத்தல்களுக்கு ஆளாக நேரிடும் குழந்தைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு என்பவற்றை வழங்கும் கட்டமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டியதன் அவசியத்தை ஆரம்பத்திலேயே CPA குறிப்பிடுகிறது. ஆயினும் கூட, அத்தகைய நடவடிக்கைகள் அரசியலமைப்பு மற்றும் சர்வதேச நியமங்களில் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் என்பவற்றை பின்பற்றி செய்யப்பட வேண்டும். தற்போதைய சட்டமூலத்தில் நிகழ்நிலை பாதுகாப்பு குறித்த அக்கறை பெயரளவில் மட்டுமே உள்ளது என்பது துரதிஷ்டவசமானது. வரையறுக்கப்பட்ட பாதுகாப்புகள் மற்றும் துஷ்பிரயோகத்திற்கான பரந்த வாய்ப்புகளுடன், அரசாங்கத்தின் ஒரு அங்கமான நிறைவேற்று ஜனாதிபதியின் அதிகாரங்களை விரிவுபடுத்தும் சட்டங்களை அறிமுகப்படுத்தும் அரசாங்கத்தின் சமீபத்திய முயற்சியை, சட்டமூலம் பிரதிபலிக்கிறது.

சட்டமூலத்தை பற்றிய CPA வின் கரிசனைகள், உள்ளடக்கங்கள் மற்றும் சட்டத்தை உருவாக்கும் செயல்முறை ஆகிய இரண்டுடனும் தொடர்புடையவை. முன்மொழியப்பட்ட சட்டமூலம் பல சிக்கலான ஏற்பாடுகளை கொண்டுள்ளது என்று CPA குறிப்பிடுகின்றது: இவை, தடைசெய்யப்பட்ட அறிக்கைகள் மற்றும் நிகழ்நிலை காப்பு என்றால் என்ன என்பவற்றுக்கான வரைவிலக்கணங்கள், தெளிவற்ற பரந்த கலைச்சொற்கள்; இணையம் அடிப்படையிலான தகவல் தொடர்பு சேவைகளை வழங்கும் சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடைத்தரகர்களுக்கான விதிகளை உருவாக்கும் அதிகாரம் என்பவற்றை உள்ளடக்கிய விரிவான அதிகாரங்களுடன் நிகழ்நிலை ஆணைக்குழுவொன்றை ஜனாதிபதி நியமித்தல்; சட்டத்தின் மூலம் தேவைப்படும் அனைத்து விடயங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தும் அதிகாரங்களை அமைச்சருக்கு வழங்குதல், மற்றும் சமூக ஊடகங்களில் கருத்து சுதந்திரத்தின் மீது சுமத்தப்பட்ட கடுமையான கட்டுப்பாடுகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. சட்டமூலம் தண்டனை நடவடிக்கைகளை வேரூன்றச்செய்கின்றதுடன் வேண்டுமென்றே கருத்து சுதந்திரம் மற்றும் மாற்றுக்கருத்தை குறிவைக்கிறது என்று CPA மேலும் குறிப்பிடுகிறது.

மேலும், சட்டமூலம் வெளியிடப்பட்ட நேரம் குறித்து CPA அக்கறை கொண்டுள்ளது. திருத்தப்பட்ட பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் வெளியிடப்பட்ட அதே நாளில் நிகழ்நிலை காப்பு சட்ட வெளியீடானது தற்செயலான செயல் அல்ல. இரண்டு சட்டமூலங்களையும் கொண்டு செல்வதற்கான வெளிப்படையான அவசரம், ஒரு ஜனநாயக விரோத சட்டமன்ற வேலைத்திட்டத்தை சுட்டிக்காட்டுகிறது. இது இலங்கையில் கருத்துச் சுதந்திரம் மற்றும் மாற்றுக் கருத்துரிமை மீதான

ஒடுக்குமுறை என்பவற்றை செயல்படுத்த சட்டரீதியான ஆட்சியை உருவாக்குவதில் தற்போதைய அரசாங்கத்தால் வழிநடத்தப்பட்டுள்ளது. மேலும், முன்மொழியப்பட்ட இச்சட்டங்கள் மேற்குறிப்பிட்ட அடிப்படை சுதந்திரங்களை, "தேசிய பாதுகாப்பு" இன் கீழ் வழங்கப்பட்ட கட்டுப்பாடுகள் எல்லையை விரிவுபடுத்துவதன் மூலம் கட்டுப்படுத்துகின்றன என்று CPA குறிப்பிடுகின்றது. இவை நிறைவேற்று ஜனாதிபதி அலுவலகத்தின் அதிகாரங்களை விரிவுபடுத்துவதுடன் இலங்கையின் மனித உரிமைகள், ஆட்சி மற்றும் ஜனநாயகம் என்பவற்றில் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

கடந்த காலங்களில் கருத்துச் சுதந்திரம் மற்றும் மாற்றுக் கருத்து தெரிவிக்கும் உரிமைகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அடுத்தடுத்து வந்த அரசாங்கங்களால் சட்டங்களை இயற்றுவது தொடர்பாக பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன என்று CPA குறிப்பிடுகிறது. எடுத்துக்காட்டாக, 2015 ஆம் ஆண்டில், தண்டனைச்சட்டம் மற்றும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், வெறுப்பு பேச்சு மற்றும் வகுப்புவாத வன்முறை மற்றும் இன ஒற்றுமையின்மையைத் தூண்டுவதை குற்றமாக்க முயன்றன. 2021ஆம் ஆண்டில், "இணைய அறிக்கைகள்" மூலம் தவறான மற்றும் தவறாக வழிநடத்துதல் பரவுவதைத்தடுக்க சட்டங்களை உருவாக்க அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இதுவரையிலும் வர்த்தமானியில் வெளியிடப்படாத முன்மொழியப்பட்ட ஒளிபரப்பு ஒழுங்குமுறை அதிகாரசபை சட்டமூல பின்னணியில் நிகழ்நிலை காப்பு சட்டமூலம் அரசாங்கத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை மக்களின் குறிப்பிடத்தக்க அடிப்படை உரிமைகளை மீறும் சட்டவாக்க முயற்சிகளுக்கு எதிராக CPA தொடர்ந்து எதிர்ப்பை வெளியிட்டு வருவதுடன் அரசாங்கத்தின் இது போன்ற ஒரு சட்டமூலத்தை சட்டமாக்குவதற்கான செயல்முறையில் அக்கறை கொண்டுள்ளது. எனவே சட்டமூலத்தை திரும்பப் பெற வேண்டும் என்றும், மேலும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்கும் மற்றும், ஒரு வலுவான அத்துடன் பாதுகாப்பான நிகழ்நிலை இடத்தை வழங்கும் நோக்கத்துடன். வெளிப்படையான மற்றும் பல்வேறு தரப்பினரால் தெரிவிக்கப்பட்ட ஒரு சட்டத்தை உருவாக்குவதற்கான செயல்முறையை தொடங்குமாறும் CPA அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

நிகழ்நிலை காப்பு சட்டமூலம் குறித்து மேலும் கருத்துக்கள் வெளியாக உள்ளன.

Centre for Policy Alternatives (Guarantee) Limited | 6/5, Layards Road, Colombo 5, Sri Lanka
Tel: ++94112081384, +94112081385, +94112081386 | Fax: +9411 2081388 | Email: info@cpalanka.org | Web: www.cpalanka.org